# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,110 — 1960 අප්‍රේල් 20 වැනි බදාදා — 20.4.1960

12,110 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## நாநாவித அறிவித்தல்கள்

### உணவுக்கட்டுப்பாட்டு விளம்பரம்

**1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 25 ந் திகதி தொடங்கும் 20 வது பங்கீட்டு வாரத்திலிருந்து 19 வது தொடர்ச்சித் துணைப் பங்கீட்டு அரிசிப் புத்தகங்களின் கூப்பன்களின் வலிமை**

1952 ம் ஆண்டின் உணவுக்கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் III ம் பாகத்தின் "இ" தலைப்பின் கீழ் வரும் 4 (3) ம் பிரமாணத்தின் படியும், 11.12.59 ல் வெளிவந்த 12,002 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 3.12.59 ம் திகதியைக்கொண்ட எனது விளம்பரத்தின் படியும், 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 25 ந் திகதி தொடங்கும் 20 ம் பங்கீட்டு வாரத்திலிருந்து ஒரு ஆளுக்கு ஒரு வாரத்திற்குரிய முழுச் சட்டபூர்வமான 4 இருத்தல் பங்கீட்டரிசியைப் பெறுவதற்கு ஒரு கூப்பன் மட்டுமே கொடுக்கப்பட வேண்டுமென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. ஆகவே, மேலே குறிப்பிட்டுள்ள விளம்பரத்தில் விபரித்துள்ள 19 வது தொடர்ச்சித் துணை அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களின் 20/25 தொடக்கம் 24/25 வரை இலக்கமிட்டுள்ள கூப்பன்களினதும், 20/45 தொடக்கம் 24/45 வரை இலக்கமிட்டுள்ள கூப்பன்களினதும் வலிமை மாற்றப்பட்டுள்ளது. இக்கூப்பன்களின் தற்போதைய வலிமையைக் கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை விபரிக்கின்றது. இவ்வண்ணமே, பங்கீட்டுப் புத்தகதாரர்கள் பங்கீட்டின் கீழ் பெறும் அரிசிக்குக்கூப்பன்களை அதிகாரம் பெற்ற வியாபாரிகளுக்குக் கொடுக்கவேண்டும்.

| வாரம் | காலம் | ஒரு வாரத்திற்கு ஒரு ஆளுக்கு சட்டபூர்வமான 4 இரு. பங்கீட்டை வழங்குவதற்கு வெட்டவேண்டிய கூப்பன் |
|---|---|---|
| 20 வது .. | 25.4.60 தொடக்கம் 1.5.60 வரை .. | 20/25 |
| 21 வது .. | .. 2.5.60 தொடக்கம் 8.5.60 வரை .. | 21/25 |
| 22 வது .. | .. 9.5.60 தொடக்கம் 15 5.60 வரை .. | 22/25 |
| 23 வது .. | .. 16.5.60 தொடக்கம் 22.5.60 வரை .. | 23/25 |
| 24 வது .. | .. 23.5.60 தொடக்கம் 29.5.60 வரை .. | 24/25 |
| 25 வது .. | .. 30.5.60 தொடக்கம் 5.6.60 வரை .. | 20/45 |
| 26 வது .. | .. 6.6.60 தொடக்கம் 12.6.60 வரை .. | 21/45 |
| 27 வது .. | .. 13.6.60 தொடக்கம் 19.6.60 வரை .. | 22/45 |
| 28 வது .. | .. 20.6.60 தொடக்கம் 26.6.60 வரை .. | 23/45 |
| 29 வது .. | .. 27.6.60 தொடக்கம் 3.7.60 வரை .. | 24/45 |

19 வது தொடர்ச்சி துணைப்பங்கீட்டுப் புத்தகங்களின் வலிமை 3.7.60 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

20 வது தொடர்ச்சிப்பங்கீடு 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 4 ந் திகதி திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பமாகும்.

கே. ஆள்வாப்பிள்ளை,
பதில் உணவு அதிகாரியும்,
பதில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியும்.

1960 ம் ௵ ஏப்றில் ௴ 18 ந் உ.

---

உணவு விலைக் கட்டளை இல. எம்என்/4–1960. — அரிசியும் நெல்லும்.

## விலைக் கட்டளைகள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால்—

(அ) 24.12.59 ல் வெளிவந்த 12,021 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 21.12.59 ம் திகதியிட்டுப் பிரசுரமான எம்என்/13-1959 இலக்கத்தைக்கொண்ட அரிசியினதும் நெல்லினதும் விலைகளை நிர்ணயிக்கும் உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(ஆ) இதன் கீழ்த்தரப்படும் 1 ம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர அந்தரொன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அவ்வட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அரிசியையோ நெல்லையோ விற்கலாகாது.

(இ) இதன் கீழ்த் தரப்படும் 2 ம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர இருத்தலொன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அவ்வட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அரிசியையோ நெல்லையோ விற்கலாகாது.

(ஈ) (அ) எந்த அரிசியினதோ நெல்லினதோ எவ்வித விற்பனையும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரே நேரத்தில் நிகர அந்தர்த் தொகையில் அல்லது அதற்குக் கூடுதலாகவோ விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும் ;

(ஆ) எந்த அளவு அரிசியினதோ நெல்லினதோ எவ்வித விற்பனையும் ஒரேநேரத்தில் நிகர அந்தருக்குக் குறைவாகப் பாவனைக்கோ உட்கொள்ளுதற்கோ விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படுமென்றும் ஆக்ஞையிடுகிறேன் ;

(உ) பங்கீட்டரிசியையோ நெல்லையோ வேறொரு பொருளுடன் கலந்து எவராவது மன்னார் மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாதென ஆக்ஞையிடுகிறேன்.

(ஊ) பங்கீட்டரிசியையோ நெல்லையோ விற்குமிடத்து அவ்வட்டவணைகளில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்ட ஆகக்கூடிய விலைகளில் அவற்றைக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(எ) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, " இருத்தல் " அல்லது " இரு." என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவைமுறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆக்ஞையிடுகிறேன்.

(ஏ) பங்கீட்டரிசியையோ நெல்லையோ தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலோ அல்லது எவ்வாகனத்திலோ வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் அரிசியின் அல்லது நெல்லின் தொகை, இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களில், விலைக்குறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப் பலகைகளில் எழுதப்பெற்று பாவனையாளர் ஒவ்வொருவருக்கும் நெல்லும் அல்லது அரிசியும் அதன் ஆகக்கூடிய விலைகளும் தெரியக்கூடியதாக அக்கொள்கலத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஐ) பங்கீட்டரிசியை அல்லது நெல்லை மொத்த விலையாகவோ அல்லது சில்லறை விலையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அல்லது நெல்லின் தொகை (நிறையில்) ;
(இ) விற்கப்பட்ட பங்கீட்டரிசியின் அல்லது நெல்லின் விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது

1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 18 ந் திகதி மு.ப. 11 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

### முதலாம் அட்டவணை

| பத்தி 1 | மொத்த வியாபாரியின் நிகர அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விலை | |
|---|---|---|
| | பத்தி 2 | பத்தி 3 |
| பகுதி | அரிசி | நெல் |
| | ரூ. ச. | ரூ. ச. |
| மன்னார் பட்டினசபைப் பகுதி | 14 75 | 7 39 |
| கிராமச்சங்கப் பகுதிகள்— | | |
| நானாட்டான் கிழக்கு | 14 48 | 7 26 |
| முசலி தெற்கு | 14 75 | 7 39 |

### இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலொன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை | |
|---|---|---|
| | பத்தி 2 | பத்தி 3 |
| பகுதி | அரிசி | நெல் |
| | ரூ. ச. | ரூ. ச. |
| மன்னார் பட்டினசபைப் பகுதி | 0 14 | 0 07 |
| கிராமச்சங்கப் பகுதிகள்— | | |
| மன்னார் கிழக்கு | 0 14 | 0 07 |
| மன்னார் மேற்கு (தலைமன்னார் கி.வி. பகுதியைத் தவிர) | 0 14 | 0 07 |
| மன்னார் மேற்கு (தலைமன்னார் கி.வி. பகுதி) | 0 14½ | 0 07½ |
| எருக்கலம்பிட்டி | 0 14 | 0 07 |
| மாந்தை தெற்கு | 0 14 | 0 07 |
| மாந்தை வடக்கு | 0 14 | 0 07 |
| பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனியைத் தவிர) | 0 14½ | 0 07½ |
| பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனி) | 0 15 | 0 07½ |
| இலுப்பைக்கடவை | 0 14½ | 0 7½ |
| வங்காலை | 0 14 | 0 07 |
| நானாட்டான் கிழக்கு (பெரியமுறிப்பு கி. வி. பகுதியைத் தவிர) | 0 13½ | 0 07 |
| நானாட்டான் கிழக்கு (பெரியமுறிப்பு கி. வி. பகுதி) | 0 014 | 0 07 |
| நானாட்டான் மேற்கு | 0 13½ | 0 07 |
| முசலி தெற்கு (மறிச்சிக்கட்டி கி.வி. பகுதியைத் தவிர) | 0 14 | 0 07 |
| முசலி தெற்கு (மறிச்சிக்கட்டி கி.வி. பகுதி) | 0 14½ | 0 7½ |
| முசலி வடக்கு | 0 14 | 0 07 |
| பனங்காமம் | 0 15 | 0 07½ |
| மேற்குமூலை | 0 14½ | 0 7½ |

குறிப்பு.—இவ்விலைகள் நெல்லையோ அரிசியையோ விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ் விலைகளுக்குக் கூடுதலாக எவரும் பங்கீட்டு அரிசியையோ நெல்லையோ விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது